# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI
## OS 3-2020
## PW-1

பெயர் : வள்ளியம்மாள்
க/பெ : கருப்புசாமி
தேதி : 26.08.2023

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**கேள்வி :** உங்களது காட்டிற்கு பெரியசாமி, ராசப்பன், ரங்கசாமி ஆகியோர்தான் முன்னாள் உரிமையாளர்கள் என்றால் ?.

**பதில் :** சரிதான்

**கேள்வி :** ராசப்பனுக்கு இரண்டு மனைவிகள் என்றால் ?

**பதில் :** சரிதான், அவர்களுள் இளையதாரத்தின் பெயர் பாப்பாயம்மாள். முத்த தாரத்தின் பெயர் தெரியாது.

**கேள்வி :** பாப்பாயம்மாளுக்கு துளசிமணி, சரஸ்வதி என்ற மகள்கள் உள்ளனர் என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி :** ராசப்பனின் முதல் தாரத்திற்கு மணி என்ற மகன் மட்டும் உள்ளார் என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி :** மேற்படி மணி, துளசிமணி, சரஸ்வதி, பாப்பாயம்மாள் ஆகியோர் மட்டும் தான் தற்போது ராசப்பனின் வாரிசுகளாக உயிருடன் உள்ளனர் என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி :** பெரியசாமிக்கு வள்ளியம்மாள் என்ற மகள் உள்ளார் என்றால் ?

**பதில்** : சரிதான், அது நான்தான்.

**கேள்வி :** தற்போது வள்ளியம்மாள் உயிருடன் உள்ளார் என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி :** ரங்கசாமிக்கு இரண்டு தாரமா என்றால் ?

**பதில்** : எனக்கு தெரியாது, ஆச்சியம்மாள் என்ற மனைவி உள்ளது மட்டும் தெரியும்.

**கேள்வி** : ரங்கசாமி ஆச்சியம்மாளுக்கு எத்தனை வாரிசு என்றால் ?

**பதில்** : இரண்டு மகள்கள். பூங்கொடி மற்றும் சாந்தி. மகன்கள் யாரும் கிடையாது.

**கேள்வி** : ரங்கசாமி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் ?

**பதில்** : ரங்கசாமி காணாமல் போய் மீண்டும் கடந்த 3 வருடத்திற்கு முன்பாக வந்துவிட்டார். தற்போது உள்ளாரா என்று எனக்கு தெரியாது.

**கேள்வி** : ரங்கசாமிக்கு இளையதாரம் உள்ளது என்றாலும் அவர்கள் மூலம் ரங்கசாமிக்கு வாரிசு உள்ளது என்றாலும் ?

**பதில்** : எனக்கு தெரியாது.

**கேள்வி** : ரங்கசாமி தற்போது உயிருடன் தான் உள்ளார் என்றால் ?

**பதில்** : எனக்கு தெரியாது.

**கேள்வி** : என்னையும், வாதி சாந்தியையும் தவிர மேலே குறிப்பிட்டுள்ள நபர்களுக்கும் தாவா சொத்தில் பங்குள்ளது என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி** : நீங்கள் அவர்களை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி** : இவ்வழக்கின் பிரதிவாதிகளை தவிர மேலும் 9 பேருக்கு தாவா சொத்துக்கள் பாத்தியம் என்றால் ?

**பதில்** : அது எல்லாம் எனக்கு தெரியாது.

**கேள்வி** : தாவா சொத்தில் பிரதிவாதிகள் மட்டும் உரிமையாளர்கள் என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ?

**பதில்** : வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன். எனக்கு தெரிந்து அவர்கள் மட்டும் தான் உரிமையாளர்கள்.

**கேள்வி** : நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 பட்டாவில் காலை எண் 91/5 மொத்தமாக 16 பேர் உரிமையாளராக காட்டப்பட்டுள்ளனர் என்றால் ?

**பதில்** : சரிதான்.

**கேள்வி :** மேற்படி அனைவரையும் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நீங்கள் தாக்கல் செய்த தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் ?

**பதில்** : சரியல்ல.

**கேள்வி :** எத்தனை பேருகளுக்கு பங்குள்ளது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் ?

**பதில்** : எனக்கு தெரியாது.

**கேள்வி :** ஊத்துக்குளி வட்டாச்சியர் நாகா எண். 3425/17/S2 ல் பிறப்பக்கப்ட்ட உத்தரவை உங்களால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்ய இயலுமா ?

**பதில்** : எனது மகனிடம் உள்ளது. அடுத்த வாய்தாவில் எடுத்து வருகிறேன். எனது மகன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.08.26 20:12:10 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.